22.6.2012

# அன்னை மயமான வாழ்க்கையில் பழமையும் புதுமையும்

அன்னை மயமான வாழ்வு அன்பு மயமான வாழ்வு. அற்புதம் நிறைந்த அகவாழ்வு. அதிசயம் தன் ஆச்சர்யத்தை இழந்த மனித வாழ்வு. மனிதனை மற்றவர் மகோன்னதப் பிறவியாகப் போற்றும் மக்கள் மனநிலையைக் காணும் நேரம் மனித வாழ்வு அன்னை வாழ்வாகிறது. நம்மால் நாற்காலியில் உட்கார்ந்து தியானம் செய்ய முடிவதில்லை. முடிந்தால், தியானம் ஆழ்ந்த நேரம் நம்மை அறியாமல் தரையில் வந்து உட்காருகிறோம். *'ஓம் நமோ பகவதே'* என்றால் மனமும், ஜீவனும், ஆத்மாவும் நிறைவு பெறுகின்றன. மந்திரம் சொல்லிய பரம்பரை பழக்கம். மந்திரம் மாறுகிறது. பழக்கம் போகவில்லை. பகவான் மந்திரங்கள் எழுதியுள்ளார். அன்னை ஆயிரம் மந்திரங்களைப் பயன்படுத்தினார். தான் எழுதிய எல்லா மந்திரங்களையும் விட *MOTHER, ஸ்ரீ அரவிந்தர்* என்ற அவர் திருநாமம் அதிக சக்தியுள்ள மந்திரங்கள் எனவும் கூறினார். நமக்கு தியானம் லயமான நேரம் மந்திரங்கள் மறப்பது தெரியும். லயம் நிலைத்த நேரம் எந்த மந்திரத்தைச் சொன்னாலும் லயம் கலைந்து தியானமாகும் என்பது நம் அனுபவம்.

மந்திரம் பழைய வாழ்வின் மணம்.

தியானமும் லயமும் புது வாழ்வின் புதுமை.

எதை அறிந்தாலும், எவ்வளவு அனுபவம் வந்தாலும், மீண்டும் மனம் பழமையை விரும்பி ஆர்வமாக நாடுவதைக் காணலாம். பழமை தவறில்லை. பழமையின் சாரம் வைரமானது. பழமையின் அன்றைய உருவம் இன்று உதவாது. தவறு என்று எல்லா நேரமும் சொல்ல முடியாது. குடும்பப் பழமை, இன்று புதுமை. குடுமி பழமை, கிராப் புதுமை. இன்று குடுமி வைத்துக் கொள்வது தவறில்லை. எவரும் அதை நாடுவதில்லை. குடுமி தவறில்லாத பழமை. ஓலைச் சுவடி பழமை. இன்று ஓலைச் சுவடியில்லை. உபயோகப்படுத்த முடியாது. வற்புறுத்தினால் தவறில்லை. நஷ்டம் நமக்குத்தான். டைபாய்டு வந்தால் வைத்தியர் கஷாயம் சாப்பிடலாம். எவரும் தடுக்க மாட்டார்கள். உயிர் போகும். பென்சுலின் காப்பாற்றும்.

பழமையில் உயர்ந்தவை உன்னதமானவை உண்டு.
அவை காலத்திற்கும் நமக்குரியவை.
தவறில்லாத பழைய பழக்கங்களுண்டு. இன்று பயன்படாது.
தவறில்லாவிட்டாலும் பழமை சிலவற்றில் கேலிக்குரியது.

கேலிக்குரியதில்லை என்றாலும் நாம் கைவிட்டு விட்டோம்.

பழமையின் சாரம் புதுமை மலர அவசியம்.

உடல் பழமை, உடை புதுமை. உடையை காலத்திற்குத் தகுந்தாற்ப் போல் மாற்றுகிறோம். உடலை அப்படி எளிதில் மாற்ற முடியாது. ஆனாலும் உடல்தானே ஓரளவு காலத்தையொட்டி மாறிக் கொள்கிறது. தொந்தி ஒரு காலத்தில் மரியாதைக்குரியதாயிற்று. இன்று தொந்தியுள்ளவரைக் காண்பதில்லை.

<u>பழமையின் பெருமைகள்</u>:-

1. வயதால் பெற்ற அனுபவத்தை மதிப்பது.
2. அனுபவம் பெறாவிட்டாலும் வயதுக்கு மதிப்பு தருவது.
3. உறவில் விஸ்வாசம்

   குரு, சிஷ்யன், பெற்றோர், பிள்ளைகள், கணவன், மனைவி, உடன் , நட்பு (பிசிராந்தையார்).
4. வார்த்தையைக் காப்பாற்றுவது.
5. பக்தியின் உண்மையை ஏற்பது.
6. காலத்தைக் கடந்த உயர்ந்த கருத்துகளை எவரிடமிருந்தும் ஏற்பது.
7. வாழ்விற்குரிய ஆன்மீக அம்சம்.
8. பெண்ணின் பெருமை.
9. ஞானத்தின் சிறப்பு.
10. வீரம்

எந்த ரூபத்தில் எழுந்தாலும் உயர்ந்தவையின் உயர்வை தோற்றத்தைக் கருதாது ஏற்பது நல்லது. இக்கருத்தின் மையமானது மனிதாபிமானம். அடிப்படையில் மனிதனைப் புறக்கணிப்பது மனித சுபாவம். ஞானம் வளர்ந்தால் உடன் வளர்வது அகந்தை. அது சங்கரருக்கும், இராமானுஜருக்கும் வந்ததால் இறைவன் சண்டாளனாக வந்து ஞானத்தை விட மனிதன் முக்கியம், மனிதனின் முக்கியத்தை அறியும் ஞானம் இறைவனை சித்திப்பதை விட முக்கியம் என இறைவன் இந்த இரு பெரியவர்கட்கு உணர்த்தினார். குள்ளச்சாமி பகவான் அறையுள் நுழைந்து டீ கப்பை கவிழ்த்துக் காட்டியது, பழையதைப் போற்றும்வரை பழைய ஞானத்தின் புற உருவத்தைப் போற்றும் வரை புதிய ஞானம் வாராது என்பதாகும்.

இராஜாஜி சுதந்திராக் கட்சி ஆரம்பித்து காமராஜை அதில் சேரச் சொன்னார். காமராஜூக்கு காங்கிரஸ் மீது உயிர். தகப்பனார் உயர்ந்தவர் என்பதால் அவரிறந்த பின் அவர் உடலை வைத்திருக்க முடியாது. உயர்ந்ததின் உயர்வு உயிர் போனவுடன்

போயிற்று. உடலை எடுக்க வேண்டும். நீ காங்கிரஸை விட்டு என்னுடன் வந்து தேச சேவை செய் என்றார். கட்சி பழையது. தேசம் நிலையானது என வாதம் செய்தார். அவர் வாதத்தைக் கேட்டு செயல்பட வேண்டுமா இல்லையா என்பது கேள்வியில்லை. இது அவருடைய வாதம், விளக்கம். அதில் உண்மையுண்டு.

Survival, growth, development, evolution என்ற கட்டங்கள் சமூக வளர்ச்சியில் எழுபவை. அவை குடும்ப வளர்ச்சியிலும், ஸ்தாபன மாறுதலிலும் உண்டு. முக்கியமாக தனி மனித வளர்ச்சிக்கு கருதப்பட வேண்டியது தொடர்ந்த புதுமை ஆழ்ந்த பழமையின் அடிப்படையில் கட்டப்படுவதை இங்கு காணலாம். இவற்றை உயிர் வாழ்வது, வளர்ச்சி, அபிவிருத்தி, பரிணாமம் எனலாம்.

கடந்ததை கைவிடாமல் வருவதை ஏற்பதும்
பழையன கழிதலும், புதியன புகுதலும் இணைவதைக் காணலாம்.

1) வாழத் தேவையான எதையும் விலக்க மனம் வாராது.

இன்றைய நிலையில் அது போன்ற அனைத்தையும் நாம் அறிவோம். முக்கிய உதாரணம் கல்வி. 1980 வரை கல்வியை அலட்சியம் செய்த மக்கள் அதன் பின் LKG முதல் மெடிக்கல் காலேஜ் வரை கல்வி பெற முழு முயற்சி செய்கின்றனர். வாழ்வை பாதிக்கும் எதையும் மனிதன் அண்ட விடுவதில்லை.

மது,மாது, சூது, சீட்டு இவற்றை பிள்ளைகள் விலக்க பெற்றோர் பெரும் பாடுபடுகின்றனர்.

மது நெடுநாளைய பழக்கம் என்பதால் சேர்ப்பதில்லை.
கல்வி புதியது என்பதால் அலட்சியப்படுத்துவதில்லை.

அன்னை கூறும் நான்கு கட்டுப்பாடுகள் புகை, மது, பெண், அரசியல் விலக்கு. இவை மரபுக்கும் விலக்கு.

<u>அன்னை விழைவது</u>: தோற்றத்தை விலக்கி விஷயத்தைக் கருத வேண்டும்.
சுதந்திரமான கட்டுப்பாட்டை ஏற்க வேண்டும்.
மூட நம்பிக்கையான சடங்குகளை விலக்க வேண்டும்.

எல்லா வாழ்விலும் உயர்வுண்டு, தாழ்வுண்டு. பிறர் நோக்கில் அவரை அறிவது அன்னைக்குகந்தது. சங்கராச்சாரியார் பெரிய மகான். அவர் கொள்கை அத்வைதம். ஆயிரம் ஆண்டுகளாக இந்தியா பின்பற்றுவது. இவர் இந்தியாவைச் சுற்றி வந்து சதஸ் நடத்தி மற்ற மதங்களை ஆச்சர்யமாக வென்று அத்வைதத்தை நிலை நாட்டினார். இது பெரும் இலட்சியம். இவ்வழியிலுள்ள சிறப்புகள் பல. அவற்றுள் ஒன்று பிறர் கோணத்தில் பிரச்சினையை அணுகுவது. பிறரினிக்கப் பழகுவது. சதஸில் எந்த பண்டிதனும்

எளிமையில் செயல்பட முடியாது. கூடியுள்ளவர் பெரும்பாலும் பண்டிதர்கள். விஷய ஞானமுள்ளவர், சமயோசிதமாகப் பேசுபவர்கள், ஏக சந்த கிராகிகள். தான் இங்கு கூறும் சொல்லை - வாதத்தை - எல்லாக் கட்டங்களிலும் முன் கூட்டி பல முறை கருதி, யோசனை செய்து, சோதனை செய்தவர். இவர்களிடையே ஒரு சொல் எடுபட அச்சொல் இவர்களின் அறிவைக் கடந்ததாக இருக்க வேண்டும். அத்துடன் எதிரி நம் சொல்லை ஏற்க வேண்டுமானால், அவன் நம் கருத்தில் தன் கருத்தைக் காண வேண்டும். சதஸில் வெல்பவர்கள் இரு வகை 1) உயர்ந்தவர் இனிமைக்குப் பேர் போனவர், 2) தாழ்ந்தவர் கடுமையான குதர்க்கமுடையவர். '*இன்சொலாலன்றி இரு நீர் வியன் உலகம் வன் சொலால் என்றும் மாறாதே*' என்றுணர்ந்தவர். அது போன்ற பண்டிதர் பிறந்த ஊர் மக்களிடம் அவ்வினிமை நிறைந்திருக்கும். கேரளாவில் மான் கொம்பு என்ற ஊருக்கு அப்பெயருண்டு.

2) வளர்ச்சி வளர அஸ்திவாரம் பலமாக இருக்க வேண்டும். அஸ்திவாரம் பழையது. வளர்ச்சிக்கு சக்தி போதுமானதாக இருந்தால் வளர முடியாது. குழந்தை வளரும் பருவத்தில் நடக்காது, ஓடும். பத்து அல்லது இருபது மடங்கு சக்தியில்லாமல் வளர்ச்சியிருக்காது. அந்த அளவு சக்தியெழ உற்சாகம் வேண்டும். புதிய பாஷன் வந்தபின் அதை உடனே பெற எழும் உற்சாகம் அந்த சக்தியைக் கொடுக்கும் அஸ்திவாரம் பழையது, வளர்ச்சிக்குரிய சக்தி புதியதின் மீதுள்ள மோகத்தால் எழுவது. இரண்டும் சேர்ந்தால் வளர்ச்சி தொடரும். பழமைக்கு புதுமையின் அம்சம் சில சமயம் உண்டு. ஷேக்ஸ்பியர் முதலில் எழுதிய கையெழுத்து பழையது. ஆனால் புது விஷயத்தில் இல்லாத பெருமையை உடையது. இவை விதிவிலக்கானவை.

3) அபிவிருத்தி என்பது பழைய நிலையின் அடிப்படை மாறாமல் புதியன உற்பத்தியாவது. விவசாயி உரமிட்டது அது போன்றது. டைப்ரைட்டர் அப்படியே டைப்ரைட்டராக இருக்கும்பொழுது எலக்ட்ரிசிட்டியால் செயல்படுவது development.

4) டைப்ரைட்டர் கம்ப்யூட்டராவது பரிணாமம் evolution. கம்ப்யூட்டரின் அடிப்படை முற்றிலும் மாறியது. விவசாய கிராமத்தில் ஒருவன் பேப்பர் பாக்டரி ஆரம்பித்தால் நிலம் சம்பாதித்ததற்குப் பதிலாக பாக்டரி சம்பாதிக்கிறது. சம்பாத்தியம் ஒன்று. அடிப்படை நிலம் மாறி பாக்டரி ஆகிறது. இது பரிணாமம்.

இங்கெல்லாம் நாம் பழைய நிலையும் புது நிலையும் பிரிய முடியாமலும் பழைய நிலையைக் காப்பாற்ற முடியாமலுமிருப்பதைக் காண்கிறோம். இந்த சட்டங்கள் (Psychological status) மனோதத்துவ உண்மைகளில் பெரும் முக்கியத்துவம் பெறும். மன்னராட்சி, மக்களாட்சி எதிரெதிரானவை. ஒற்றுமை, வேற்றுமைகளைக் காண்போம்.

வேற்றுமை:-

1. முடிவு அரசனுடையது, முடிவு மக்களுடையது.
2. எல்லாப் பணமும் அரசனுடையது, ஜனாதிபதிக்கு சம்பளம் மட்டும் உண்டு.
3. எல்லா அதிகாரிகளையும் அரசன் நியமிப்பான். அதிகாரிகளை நிர்வாகம் நியமிக்கும்.

ஒற்றுமை:-

1. அதிகாரம் அதிக காரமாக செயல்படுவது தொடரும்.
2. மக்கள் மன்னனைப் போற்றியது போல் ஜனாதிபதியைப் போற்றுவர்.
3. எதேச்சாதிகாரம் மெஜாரிட்டியால் நிலைக்கிறது.

எந்த ஸ்தாபனத்திலும் நல்லது கெட்டது உண்டு. நல்லது தொடர வேண்டும். கெட்டது முடிவு பெறும். காலத்திற்குரியது எனவும், காலத்திற்கும் உரியது எனவும் பிரிகின்றது. முந்தையது அழியும், பிந்தையது நிலைக்கும்.

மரபும், ஸ்ரீ அரவிந்தமும் ஒன்று எனலாம், எதிரானவையெனலாம். உண்மையில் மரபின் சாரத்தின் மீது எழுப்பப்பட்ட கட்டிடமே ஸ்ரீ அரவிந்தம். ஸ்ரீ அரவிந்தத்தின் முக்கிய அம்சங்களும், சிகரமான பெரிய அம்சங்களும் வித்தாக மரபில் இல்லாமலில்லை. ஆனால் இன்று எலக்ட்ரிசிட்டியால் நாம் நெருப்பு, விளக்கைப் பெறுவதற்கும் அன்று கல்லால் தீப்பொறி எழுப்பிய நெருப்பும் போல் ஒற்றுமை உண்டு என்றாலும் தூரம் அதிகம். கண் நட்சத்திரங்களைக் கண்டு வான சாஸ்த்திரம் எழுதியது. இன்று டெலிஸ்கோப் கோடிக்கணக்கான நட்சத்திரங்களை படமாக வரைந்து அவற்றின் பாதையைக் கணக்கிடுகின்றனர். மூலிகைகளை அன்று சூட்சுமமாகக் கண்டனர். இன்று மைக்ரோஸ்கோப் மூலமாக இலைகளை ஆராய்கின்றனர்.

நன்றியறிதல் பழையது. அன்னையின் அருள் புதியது. வாழ்வின் அனுபவம் பிறருக்கு உதவி செய்தால் அவரால் தவறாது தொந்தரவு வரும். அன்னை அருளால் நன்றியறிதலுடையவர் பெற்ற பேருதவி கருவியாகச் செயல்பட்டவர்க்கு அதே பேருதவி ஒவ்வொரு மாதமும் வரும்படி அமைந்தது.

நன்றியறிதல் அன்னை பக்தியுடன் இழைவது பழைய சாரமும் புதிய வாய்ப்பும் சேர்ந்து செயல்படுவதாகும். பெறும் நன்றியறிதல் பேரருள் பிறருக்கு வரும் வழி. உதவி பழைய கருத்து தீட்சை பழைய மரபு. உதவியை அன்னை தீட்சையாகப் பெற்றால் பெற்றவர் ஜீவன் பிரபஞ்ச ஜீவனாகும். அன்னையின் அருளுக்குக் கருவியாக இருந்தவர் பிரபஞ்சமாகிறார். பழையதும் புதியதும் இணையும் ஆன்மீக சட்டமிது. அன்னை பக்தி எண்ணத்தை நல்லெண்ணமாக்கும். மனிதனுக்கு பொதுவாக நல்லெண்ணமிருப்பதில்லை

என்பது மனித சுபாவத்தை அறிந்தவர் கூறுவது. எண்ணம் என்பதே கெட்ட எண்ணம் என்பது அன்னை கூறுவது. நல்லெண்ணமுள்ளவரும் உண்டு. அவருக்கு உதவி செய்யும் வாய்ப்பு நல்லெண்ணத்திற்குச் சேவை செய்யும் வாய்ப்பாகும். அந்த சேவை பிரபஞ்ச லோகத்திற்குரியது. கிருஷ்ண பரமாத்மா சாப்பிட்ட ஒரு பருக்கை அனைத்து அதிதிகளின் பசியைப் போக்கியது. நல்லெண்ணமுள்ளவர்க்கு சேவை செய்யும் வாய்ப்பு கிடைப்பதே அருள். அவர் மனம் உவந்து பெற்ற ஒரு மணி அரிசி கொடுத்தவர்க்கு ஒரு மூட்டை அரிசியைப் பெற்றுத் தரும். நடைமுறையில் பல மூட்டை அரிசி விளையும் பல ஏக்கர் நிலம் வரும். வியாபார உலகில் இந்த அம்சம் செயல்படுவதைக் காணலாம். ஒரு பிரபலம் பெற்றவருக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்து அவர் பெயரை விளம்பரத்திற்கு ஏற்றவர் பல ஆயிரம் கோடி பெறுகிறார். எந்த செயலிலும் பல அம்சங்கள் உள்ளன. செயலுக்கு ராசியுண்டு. செய்பவருக்கு பர்சனாலிட்டியுண்டு. பெறுபவர் தம் சுபாவத்தில் பெறுகிறார். செயலின் பலனில் ராசி, பர்சனாலிட்டி, சுபாவம் வெளிப்படும். வேலைக்கு ஆள் கிடைக்காத காலத்தில் நூறு ரூபாய் வேலைக்கு ஆயிரம் ரூபாய் போனஸ் தந்து அழைத்த ஸ்தாபனத்திற்கு வந்தவர் வேலையை ஏற்றார். போனஸை மறுத்து விட்டார். இரு ஆண்டுகட்குப் பின் அவருடைய வருமானம் மாதம் ரூபாய் ஆயிரம் ஆயிற்று. ராசி, பர்சனாலிட்டி, சுபாவம் சேர்ந்து செயல்படும் வகை.

பழைய பழக்கம் என விலக்குதல் அவசியமில்லை.
ஊழல் புதிய பழக்கம் என்பதால் ஏற்க வேண்டுமென்பதில்லை.
நல்லதை ஏற்று உயர்ந்ததுடன் இணைத்துப் பலன் பெறுவது சரி.
பழைய நிலை சிருஷ்டி புதிய இயக்கம் பரிணாமம்.

சிருஷ்டி பரிணாமத்தால் அன்றாட நிகழ்ச்சிகளை அற்புதமாக்கும் திறன் பெறுகிறது. பழைய நிலை இருளான தீமை புதிய வாய்ப்பு பரமாத்மா. இவை இணைந்து தெய்வீக வாழ்வாக மிளிர்கிறது.

*சாவித்திரி* மகாபாரதக் கதை. சாவித்திரி சத்தியவானை எமனிடமிருந்து மீட்டாள். புதிய ஆன்மீக வாய்ப்பு சத்திய ஜீவியம். இவையிரண்டும் இணைந்த பெருங்காவியம் பகவான் எழுதிய *'சாவித்திரி'*. பகவானுடைய காவியத்தில் சாவித்திரி சத்தியவானை எமனிடமிருந்து மீட்டு எமனை அழிக்கிறாள். இருண்ட எமனை ஒளிமயமான தெய்வமாக்குகிறாள். சாவித்திரியின் குரலைக் கேட்ட எமன் திகைப்படைகிறான். "நீ யார்? லோக மாதாவா? அப்படியானால் உன் திருமுக தரிசனம் தருவாயா?" எனக் கேட்கிறான். அவள் தரிசனத்தால் உலகில் மரணம் அழிகிறது. பழைய நிலை மனித சுபாவம் புதிய வாய்ப்பு இன்டர்நெட். மக்கள் இன்டர்நெட்டால் பெறும் பலன் பெரியது.

எளிய சிறு பெண் எழுத்தாளராகி விமர்சன கர்த்தாவாகி பெரிய கம்பனிகளுக்கு சேவை செய்ய முடிகிறது. பழைய சாமான் விற்கும் கடை இன்டர்நெட்டால் உலகப் பிரசித்தி பெற்ற பில்லியன் டாலர் கம்பனியாகிறது.

சாரம் + வாய்ப்பு = அற்புதம்.

பழைய நல்லதும், புதிய சிறப்பும்:-

- புதியதாக ஸ்கூட்டர் வந்துள்ளது. எவரும் அதை க்ஷணம் தாமதிக்காமல் ஏற்று மகிழ்வார்கள்.
- ஸ்கூட்டர் போலவே, கம்ப்யூட்டர், வாஷிங் மெஷின், செல்போன், i-pad, i-pod, இன்ஜினியரிங் டிகிரி, MBBS, அமெரிக்கா போவது, காஷ்மீர் பிரயாணம் போவது.
- புதியது நைலான், நைலக்ஸ், டெலிவிஷன் போல அளவு கடந்த கவர்ச்சியும் பயனும் உடையதாக இருக்கும். சற்றும் தாமதிக்க முடியாது.
- 1972 வரை மது விலக்கு இருந்தது. பின்னர் மதுக்கடைகள் ஏராளமாக வந்து விட்டன. ஆண்களால் அதை மறுக்க முடியவதில்லை.
- ஆங்கிலேயன் வந்தபொழுது அவனுடன் வந்த ஆயிரம் நல்லது, கெட்டதில் கிண்டி குதிரைப் பந்தயம் ஒன்று. அதன் ருசி கண்டவரால் அதை விட முடியாது.
- படி தாண்டா பத்தினியாக 1930, 1950 வரை இருந்த பெண்களுக்கு பூரண சுதந்திரம் வந்துள்ளது. அதை ஒருவரால் மறுத்து நான் வீட்டை விட்டு வெளியே போக மாட்டேன் எனக் கூற முடியுமா?
- குடுமி போய் கிராப் வந்தபொழுது, வேஷ்டி போய் பேண்ட் வந்தபொழுது, நீராகாரம் போய் காபி வந்த பொழுது மாற்றங்கள் அடிக்கடி தோன்றிய நேரம். எதுவும் மாறும் இந்திய பெண்கள் புடவையை விட மாட்டார் எனக் கூறினர். அதுவும் மாறி விட்டது.
- ஒரு ஆபீஸில் ஒருவர் தூக்குப் போட்டுக் கொண்டார். அவர் ஆவி பலரையும் மிரட்டுகிறது. வேலைக்கு வர பயப்படுகிறார்கள். ஒரு மந்திரவாதியைக் கூப்பிட்டனர். பூஜை செய்தார் மந்திரவாதி. ஆவி போய்விட்டது. அதைக் கண்டவர் மந்திர சக்தியை நம்ப மறுப்பாரா? அன்னை பக்தர் இருந்தால் அங்கு தவறு நடக்காது. தியானம் செய்தால் தவறு விலகும்.
- ஜாதகம் பழையது. பெரும்பாலும் பலிக்கும். அதை நம்புபவரால் அதை விட முடியுமா?
- நல்ல சகுனம், நல்ல நாள், முகூர்த்தம், ராகு காலம் யாரால் மறுக்க முடியும்?
- எந்த மதம் மாறினாலும் தாலி பெரும்பாலும் ஏதாவது ஒரு உருவத்தில் இருக்கிறது.

— அடுத்த மதத்திற்குப் போய் ஐநூறு ஆண்டு ஆன பின் ஜாதி உயிருடனிருக்கிறது.

— மூட நம்பிக்கைகளைக் கைவிட விஞ்ஞானம் வந்தது. இப்பொழுது விஞ்ஞானம் அதற்கேயுரிய மூட நம்பிக்கைகளால் செயல்படுகிறது.

அன்பர்கள் பழைய சடங்குகளை மறுத்தால் அது விலகும். திருவுருமாறி நம் நிலைமை உயரும். இராகு காலம் பெரிய நல்லதைச் செய்யும். காலம் வலுவானது. மனிதன், முக்கியமான மனிதனுடைய ஆத்மாவுக்கு வலிமை அதிகம். அன்னை கூறும் விளக்கங்களை அறிந்து, பாகுபாடு செய்து, நுணுக்கமாக உணர்ந்து, பழையதானாலும், புதியதானாலும், நல்லதை ஏற்று மற்றதை விலக்கினால் பலன் நூறு மடங்கல்ல, ஆயிரம் மடங்கு பெருகும். கல்வியில் புது நிலை மாணவர்களே பயில்வது. இதன் சிறப்பை அறிந்து பெற்றோர் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பாமல் இன்டர்நெட்டில் படிக்க அனுமதித்தால் B.A., பாஸ் செய்ய முடியாத குழந்தை Ph.D., க்கு மேற்பட்ட அறிவை அதே வயதில் பெறும் சட்டங்கள் முக்கியம். அவை பல.

— புதியது வருவதை ஏற்க மறுப்பவர் பழையதையும் இழப்பர்.

— பழையதைப் புரிந்து போற்றுபவர், புதியதால் பெரும்பலன், முழுப்பலன் பெறுவர்.

— பழையது பழையது என்பதால் சிறந்ததல்ல. (Old is gold)

— புதியது புதியது என்பதால் தாழ்ந்ததல்ல - எதையும் மாற்றதே.

— பழையது பெரும் அடிப்படையான சிறப்பால் நெடுநாள் நீடித்துள்ளது.

— எவ்வளவு பெரியதானாலும், சிறப்பானதாலும், காலம் மாறும்பொழுது பழையது மாறி புதியது எழும்.

— ஒவ்வொரு நாட்டிலும் அவருடைய உயர்ந்த பண்புகளை சில விஷயங்களில் பாராட்டுவர்.

— ஆங்கிலேயனுக்கு honour நாணயம் முக்கியம்.

— அமெரிக்கருக்கு பணம் முக்கியம்.

— ரஷ்யருக்கு உணர்ச்சி முக்கியம்.

— இந்தியர் தம் உயர்ந்த பண்பை பெண்ணில் கற்பில் கண்டனர்.

— ஜப்பானியருக்கு உயிர் போவது, ஓராயிரம் உயிர் போவதை விட ராஜ விஸ்வாசம் முக்கியம்.

— பிரம்மத்தை அறிந்தால் எதையும் அறியலாம் என்பது உபநிஷதம்.

— பிரம்மத்தின் சுதந்திரத்தை அறிந்தவர் சுதந்திரம் எப்பொழுதும் பறி போகாது.

— பிரம்மத்தின் சக்தியை (imperative) அறிந்தவர் எதையும் செய்ய முடியும். அவருக்கு எல்லா பாதுகாப்பும் உண்டு.

- இந்தியப் பண்பு பிரம்மத்தை வாழ்வில் கண்டது.
- ஸ்ரீ அரவிந்தம் முழு பிரம்மத்தைக் கண்டது.
- பகவான் கண்ட முழு பிரம்மத்தை வாழ்வில் காண்பது ஆன்மீக சித்தியின் உச்சகட்டம்.
- நந்தனார் தீக்குளித்தார்.
- கடலில் மூழ்கடிக்கப்பட்ட அப்பர் கல்லே தெப்பமாக மாறி கரையேறினார்.
- சமையல் செய்யப்பட்ட குழந்தை உயிர் பெற்றெழுந்தான்.
- சமீபத்தில் சீக்கிய கோவில் கொளுத்தப்பட்டபொழுது கிரந்தம் நெருப்பால் எரிக்கப்படவில்லை.

பழையது பெரியது.

புதியது அதனினும் பெரியது.

பழையதின் வலிமையும் புதியதின் சிறப்பும் சேர்வது அளவு கடந்த சிறப்புடையது.

ஸ்ரீ அரவிந்தம் புதியது.

மரபு, மோட்சம், கர்மம், விதி பழையது.

அன்பர் ஆத்ம விழிப்புற்று அதனதன் சிறப்பைத் தேடிச் சேர்ந்தால் அவர் வாழ்வு அன்னை வாழ்வாகும்.

அன்னை வாழ்வு ஸ்ரீ அரவிந்தரின்
புன்னகை மலர்.